**உள்ளடக்கம்:**


- ஆசீர்வாதம் 1
  அடையாளமும் சுதந்திரவாளியும்
- ஆசீர்வாதம் 2
  உங்கள் நோக்கத்தை அறிந்து கொள்ளுதல்
- ஆசீர்வாதம் 3
  ஜீவனைக் கொடுக்க அறிந்து கொள்ளுதல்
- ஆசீர்வாதம் 4
  புத்திரபாக்கியம்
- ஆசீர்வாதம் 5
  தேவ சமூகம்
- ஆசீர்வாதம் 6
  நம்பிக்கை
- ஆசீர்வாதம் 7
  கர்த்தருக்குள் மன மகிழ்ச்சி
- ஆசீர்வாதம் 8
  குணாதிசயம்

# ஆசீர்வாதம் I

## அடையாளமும் சுதந்திரவாளியும்

நசரேனாகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்திலே தெளிவாய் செவி சாய்க்கும்படியாக நான் (உங்கள் பெயரைக் குறிப்பிடுக) உங்கள் ஆவியோடு பேசுகிறேன். உங்களுக்காக தேவனால் பேசப்படுகிற வார்த்தைகளுக்கு உங்கள் முழு ஆத்துமாவோடும் செவிசாய்க்கவும். "நீர் என் உள்ளிந்திரியர்களைக் கைக் கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன். உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாகத் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்ட போது என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும். நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது." சங்.139:13-16.

உங்கள் பிதாவானவர் உங்களை விசேஷவிதமாய் சிருஷ்டித்துள்ளார். உங்கள் பிதாவானவரால் நேர்த்தியாய் திட்டமிடப்பட்டு சிருஷ்டிக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் மிகவும் விசேஷித்த நபர், உலகத்தை அஸ்திபாரம் இடமுன்னமே தேவன் உங்களைக் குறித்து திட்டமிட்டுள்ளார். நீங்கள் தற்செயலாய் உருவாக்கப்பட்டவர் அல்ல. உங்கள் பிதாவால் நீங்கள் ஸ்திரமாய் தீர்மானிக்கப்பட்டவர். உங்கள் ஜீவியத்தை ஆரம்பிக்க வேண்டிய நாள், நேரம், தேவனால் தெரிவுசெய்யப்பட்டதே "என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது." சங். 31:15.

**உங்கள் பெயர் குறித்த வேறு பிரிக்கப்பட்ட பரம்பரை ஆசீர்வாதம் அடங்கிய ஆவிக்குரிய பொக்கிஷம் உங்களுக்கு உண்டு.**

உங்கள் பிறப்பை தேவன் திட்டமிட்டு, உங்களை ஒரு குடும்பத்திற்குள் ஒன்று சேர்த்தவர் தேவனே. ‘‘கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்ட போதே உமது சார்பில் விழுந்தேன். நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர்’’ சங் 22:10. உங்கள் ஆவிக்குரிய உரிமைகளின் சகல பகுதிகளையும் தேவனே தெரிந்து கொண்டார். உங்கள் பாரம்பரிய வழிமுறைகளின்படி தகப்பன் வழி வம்ச உரிமைகளினதும், தாய் வழி வம்ச உரிமைகளினதும், பகுதிகளை தேவன் தெரிந்துகொண்டு உங்களை விஷேசித்த விதமாய் திட்டமிட்டுள்ளார். “நான் கர்ப்பத்தில் உற்பவித்தது முதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன், என் தாயின் வயிற்றில் இருந்து என்னை எடுத்தவர் நீரே’’ சங் 71:6.

எப்படியாயினும் உங்களுக்கு தேவையான சகல பகுதிகளையும் ஒன்று சேர்த்து தேவன் உங்களுக்கு தந்திருக்கிறார். உங்கள் உரிமைகள் தோல்வியுறாமல் வெற்றியின் வழியில் செல்ல தேவையான பெலனைத் தந்து ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை வாழும்படி தேவன் சகலத்தையும் உங்களுக்குள் உருவாக்கியுள்ளார். “உங்கள் பிதாவானவர் உங்களை சௌந்தர்யமுள்ளவராகவும், அன்புள்ளவராகவும் சிருஷ்டித்துள்ளார். நீங்கள் ஆச்சர்ய விதமாய் சிருஷ்டிக்கப்பட்டபடியினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தேவன் உங்களை திட்டமிடும்போதே பெரிதான எதிர்பார்ப்போடு விசித்திர விதமாய் சிருஷ்டித்துள்ளார். நீங்கள் மிகவும் விஷேசித்தவர். தேவன் உங்களை பற்றி மிகவும் இலகுவாய் சிந்தித்துள்ளார். ஏனெனில் உங்களைப் போல் வேறொருவரும் இல்லை. உங்கள் முழு சரீரத்திலும் சகல பாகங்களும் சகல காலங்களும் தேவனது விஷேட சிருஷ்டிப்பின் பிரதிபலனே. உங்கள் மனிதத்துவத்தின் சகல பகுதிகளும் தேவனது எதிர்பார்ப்பின் பிரதிபலனே. நீங்கள் நேசிக்கத் தகுந்தவர். அன்புடையவர். தேவன் தமது அன்பினாலேயே உங்களை ஆசீர்வதிப்பார். உங்களை சிருஷ்டித்த நாளில் தேவன் மகிழ்ந்து களிகூறினார். நீங்கள் கர்ப்பம் தரித்த நாள் தொடக்கம் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். உங்களுக்குள் தேவனுடைய திட்டம் பரிபூரணமாய் நிறைவேறியவுடன் தேவன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார். பிதாவாகிய தேவன் உங்கள் ஆத்துமாவை போஷித்து உங்களை ஆசிர்வதிப்பாராக.

“அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்ட படியே’’ எபே 1:4.

நீங்கள் வாழும் உலகிற்கு நீங்கள் ஒரு முக்கிய நபர். வேறு ஒருவராலும் பெற்றுக் கொடுக்க முடியாததொன்றை உங்களுக்கூடாய் உங்கள் குடும்பத்துக்கு கிடைத்துள்ளது. உங்களுக்குரியவைகள் உங்கள் குடும்பத்திற்கு அவசியம். நீங்களில்லாமல் உங்கள் குடும்பம் பரிபூரணமடைய மாட்டாது. தேவன் உங்கள் ஜீவியத்திற்குள் வைத்துள்ளதை உங்களை சார்ந்த மற்றவர்களுக்கும் அவசியமானதே.

தேவன் தமது புத்தகத்தில் உங்கள் நாட்களின் எண்ணிக்கையை குறித்துள்ளார். அது எமது அறிவுக்கு எட்டாத விடயமாயினும் தேவன் அதன் இறுதி அத்தியாயத்தை ஏற்கனவே அறிந்துள்ளார். உங்கள் ஜீவியம் தற்செயலாய் உண்டானதொன்றல்ல. தேவன் தம்மால் எழுதப்பட்ட உங்கள் சுயசரிதையின் இறுதி அத்தியாயத்தில் கண்ணோக்கமுடையவராய் உள்ளார்.

உங்கள் ஆவிக்குரிய உரிமைகளை அவர் திட்டமிட்டுள்ளார். உங்கள் பரம்பரை வழியாய் ஆசீர்வாதங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு

முன்பதாகவே தேவன் தெரிந்தெடுத்துள்ளார். உங்கள் பெயர் குறிப்பிடப்பட்ட பரம்பரை ஆசீர்வாத ஆவிக்குரிய பொக்கிஷம் உங்களுக்குண்டு. உங்கள் ஜீவிய காலத்துக்குள் நியமிக்கப்பட்ட சரியான சந்தர்ப்பத்தில் படிப்படியாக அந்த ஆசீர்வாதங்கள் தேவைக்கேற்ற விதமாய் பகிர்ந்தளிக்கப்படும். இவை யாவும் தேவனது ஆரம்பத் திட்டமே.

உங்கள் வேதனைகளை தேவன் ஏற்கனவே அறிந்திருக்கிறார். உங்கள் வாழ்க்கைப் பயணம் முடிவடைவதற்கு முன்னமே உங்கள் நிமித்தம் தேவனது மகத்தான அன்பினால் சகல ஆசீர்வாதங்களும் அவரது வல்லமையை கருத்திற்கொண்டு வேதனைகளும் தீமைகளும் நன்மைக்கேதுவாய் நடக்குமென்று அறிந்திருக்கிறோம். (ரோ.8.28)

நீங்கள் யார்? எப்படிப்பட்டவர்? உங்கள் எதிர்காலம் எப்படி அமையுமோ? நாம் அறிவோம். ஆயினும் நீங்கள் தேவ அன்பை பெறுவதும் நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு ஒரு ஆசீர்வாதமாய் அமைந்தது என்பதனையும் இவ்வுலகிற்கு ஜீவ ஊற்று என்பதையும் நாம் அறிவோம். நீங்கள் விசேஷமானவர். நீங்கள் தேவனது விசேஷபடைப்பினால் சிருஷ்டிக்கப்பட்டவர் என்பதினால் நாம் தேவனை துதிக்கிறோம்.

நசரேனாகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை ஆசீர்வதிக்கிறோம்.

# ஆசிர்வாதம் - 2

## உங்கள் நோக்கத்தை அறிதல்

நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தெளிவாய் செவிசாய்க்கும்படி நான் (உங்கள் பெயரை குறிப்பிடவும்) உங்கள் ஆத்துமாவுடன் பேசுகிறேன். தேவனது உன்னத வாக்குத் தத்தங்களுக்கு உங்கள் முழு ஆத்துமாவோடும் செவிசாய்க்கவும்.

ஏனெனில், நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கை-யாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணுகிறார். (எபேசி.2.10)

உங்கள் பிதாவாகிய தேவனுக்கும், உங்கள் நிமித்தம் ஒரு நோக்கம் உண்டு. தேவனது இருதயத்தில் உங்கள் நிமித்தம் ஒரு நோக்கம் உண்டு என்பதை நீங்கள் அறியும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தேவனது அழைப்பைப் பெற்று அவரது எதிர்பார்ப்பை அடைந்தவராய், அதன் பிரகாரம் ஜீவித்து பூர்ணத்துவத்துக்குள் கடந்துபோக நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். தேவனது கால திட்டத்திற்குள் நிற்கவும், அதைக் கடந்து போகவோ அல்லது பின்வாங்கிப் போகவோ அல்ல. அவரது எதிர்பார்ப்பை குறிப்பிட்ட நேரத்தில் நேர்த்தியாய் நிறைவேற்ற நான் உங்களை ஆசிர்வதிக்கிறேன். தேவனது வேலையை, கௌரவத்துடனும், சமாதானத்துடனும், சந்தோஷத்துடனும், தேவன் எதிர்பார்க்கும் அளவுக்கு நிறைவேற்றும்படி நான் உங்களை ஆசிர்வதிக்கிறேன். அவரால் நியமிக்கப்பட்ட நலமானதொரு பகுதியை நிறைவேற்றும்படி விசேஷமான பாத்திரமாய் உங்களை உருவாக்கியுள்ளார்.

“தம்முடைய மகிமையினாலும், காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்கு தந்தருளினதுமன்றி (2 பேதுரு 1 .3.4)

**தேவன் உங்கள் நிமித்தம் ஏற்படுத்திக்கொண்ட அமிப்: பிராயத்தை நீங்கள் கிட்டிச் சேரவேண்டும் என உங்களை ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் உங்கள் நோக்கத்தை நிறை வேற்றும்படி செயற்படும் போது உங்கள் மகிழ்ச்சியான அனுபவங்கள், உங்களுக்கும் மற்றவர்களுக்கும் முழு உலகிற்கும் நன்மையாய் அமைவதாக.**

தேவன் உங்கள் விஷேசித்த விதமாய் சிருஷ்டித்தபடியினால் அவரது வேலைத்திட்டத்தை மற்றவர்களை விட உங்களால் திறம்பட செய்ய முடியும். தேவனது கிரியைகளுடனும் வார்த்தைகளுடனும் நான் உடன்படுகிறேன். தேவன் உங்களை சிருஷ்டித்ததின் நிமித்தம் நான் உங்களை ஆசிர்வதிக்கிறேன். உங்கள் பெயரால் நிறைவேற்றப்பட உள்ள நன்மையான கிரியைகளுக்காய் ஆசிர்வதிக்கிறேன். தேவன் உங்களை சுற்றி சரியான நபர்களை வைத்துள்ளபடியினால் நான் உங்களை ஆசிர்வதிக்கிறேன். இக்கிரியைகள் நிறைவேற்றும்படி சிருஷ்டிக்கப்பட்ட உங்களுக்குள் தெளிவும் வலிமையும் கிடைக்கப்பட வேண்டுகிறேன். நான் உங்களை நேசிக்கிறேன். ஏனெனில் நீங்கள் ஒரு சிறந்த பொக்கிஷம். நீங்கள் உலகிற்கு ஆசிர்வாதமானவர்.

ஜீவனுள்ள ஜனங்கள் மத்தியில் நீங்கள் நிலைக்கும்படி நான் உங்களை ஆசிர்வதிக்கிறேன். அந்த விலையேறப்பெற்ற திட்டத்தை பூர்த்தி செய்யும்படி நீங்கள் ஒரு சிறிய பகுதியே. தேவனால் நியமிக்கப்பட்ட வேலைகளை செய்ய உங்களால் தனிமையாக முடியாதபடியால், ஒரே சிந்தை, ஒரே தரிசனம், ஒரே ஆவி உடைய நபர்களை நீங்கள் சந்திக்கும்படி நான் உங்களை ஆசிர்வதிக்கிறேன். தேவனது எதிர்பார்ப்பின்படி பரிபூரணமடைந்த அந்நியர் உடன் தொடர்பு கொள்ளவும் அவர்களது ஊழியர்

குடும்பத்தில் பங்குள்ளவர்களாகி பரிபூரணப்படவும் திருப்தியடையவும் ஆசிர்வதிக்கிறேன். தேவன் உங்கள் நிமித்தம் நிர்மாணித்த நிலையை உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் நிறைவேற்றப்பட தேவன் உங்களை ஆசிர்வதிப்பாராக.

குடும்பத்தில் ஒரு பங்காளியாய், பரிபூரணமடைந்த திருப்தியடையும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தேவன் உங்களுக்கு நியமிக்காத காரியத்தை நீங்கள் செய்யும்படி பிசாசின் வஞ்சகத்திற்கு சிக்குண்டு போகாதபடி பிதாவானவர் சரியான வாசல்கள் திறக்கும்படி பிழையான வாசல்களை அடைப்பாராக. அவைகள் நன்மையும், நியாயமானதும், இலாபமானதுமான மதிக்கப்பட வேண்டியதாய் இருந்தாலும், சத்துருவானவன் தேவன் நியமித்த காரியத்தை உங்களுக்கூடாக நிறைவேற்ற முயற்சிப்பார். தேவனால் நியமிக்கப்படாத காரியத்தை நிறைவேற்ற காலத்தையும் சிரமத்தையும் செலவழியாதபடி தேவன் தமது கிரியையை நிறைவேற்றும்படி தேவையான கிருபையைத் தந்து, இன்று நிறைவேற்ற தேவன் நியமித்த காரியத்தை முழுபலத்தோடும் நிறைவேற்றும்படி நான் உங்களை ஆசிர்வதிக்கிறேன்.

தேவனது அழைப்பின்படி அவரது நேரத்தில் முன்னோக்கிச் செல்லும்படி வாசல்களை திறந்து, அவ் அழைப்பினூடாக நீங்கள் சரியான நேரத்தில், சரியான இடத்தில் நிற்கும்படி பரிபூரண

சந்தோஷத்தை அனுபவிக்கும்படி நான் உங்களை ஆசிர்வதிக்கிறேன்.

தேவன் உங்களுக்குள் வைத்துள்ள அலங்காரத்தை குறித்து நான் நன்றி சொல்கிறேன். ஏனெனில் நீங்கள் தேவனது விஷேட படைப்பாகும். உன்னத சிருஷ்டிப்பின், அவரது படைப்பின் பிரதிபலிப்பு நீங்களே.

நீங்கள் ஒரு கதையை முடிக்க இடையில் வந்த தற்செயலான நபர் அல்ல. உலகின் இன்றைய தேவைகளின் அடிப்படையைக் கொண்டு தேவ இராஜ்யம் வர்த்திக்கும்படி தேவனது விசேடபாத்திரமே நீங்கள். அனுதினமும் உள்ளத்தில் மகிழ்ச்சியினால் அவரது வழிநடத்தலுக்கு கீழ்ப்படியும்படி நான் உங்களை ஆசிர்வதிக்கிறேன்.

**உங்களது தேவன் ஆவியின் அலங்காரத்தை உங்களுக்கு அளிக்க உள்ளார், பரலோக பரிபூரணத்தாலும் கிருபையினாலும் அலங்காரத்தாலும், ஞானத்தின் அலங்காரத்தாலும் பரிமாற்றம் அடையஉங்களை ஆசிர்வதிக்கிறேன்.**

பரலோக வாசனை ஜனங்களுக்குள் கொண்டு செல்லும்படி அவர்கள் உங்கள் மீது வரவேற்பை ஏற்படுத்துவதே தேவனது எதிர்பார்ப்பு அப்படி நிறைவேறுவது நீங்கள் கெட்டிக்காரர் என்ற-படியினாலாகும். வெற்றியுள்ளவர் என்பதினாலோ, பாதுகாப்பானவர் என்பதினாலோ, அல்லது உங்கள் ஆவிக்குரிய நிலையை கருத்திற் கொண்டோ அல்ல. உங்கள் மீது வீசும் பரலோக வாசனை-யினாலேயே.

தேவனுக்கு தேவைப்படும் காரியம் நிறைவேறும்படி நீங்கள் வாசனையான பலியாகும்படி நான் உங்களை நசரேனாகிய இயேசுவின் நாமத்தில் ஆசிர்வதிக்கிறேன்.

# ஆசீர்வாதம் - 03

## ஜீவனை கொடுக்க அறிந்து கொள்ளல்

நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தெளிவாய் செவிசாய்க்கும்படி நான் (உங்கள் பெயரை குறிப்பிடவும்) உங்கள் ஆத்துமாவோடும் பேசுகிறேன். தேவனது வார்த்தைக்கு உங்கள் முழு ஆத்துமாவோடு செவிசாய்க்கவும்.

“என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்து எனக்கு எதினால் கிடைத்தது. இதோ நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய் துள்ளிற்று” (லூக் 1:43,45)

இருவர் சந்திக்கும் போது சக்தி பரிமாற்றமடைகிறது. உங்கள் ஜீவனுக்கு வல்லமை கடந்து போகும் போது அது ஜீவனடைகிறது போல. உங்களிடத்திலிருந்து பெறுபவருக்கும் அப்படியே நடக்கும்.

மரியாளை சுற்றி தேவ மகிமையும் பிரசன்னமும் இருந்தபடியினால் எலிசபெத் யோவான் ஸ்நானகனை கர்ப்பத்தில் சுமக்கும் போதும் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது பரிசுத்தாவியின் மகிழ்ச்சி பிரவாகித்து கடந்து போகிறது.

**தேவனுக்குள் மனமகிழ்ச்சி அதிகரிக்கும் படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் இன்னொருவருடன் உறவை ஏற்படுத்தும் போது உங்களுக்குள் இருக்கும் மகிழ்ச்சி மற்றவர்களிடத்திலும் கடந்து போகும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.**

நாம் ஏற்கனவே ஜீவனுள்ளோர், ஆனாலும் ஆவிக்குரிய ஜீவனை உடையோராய் இருப்பது அதைவிட மேன்மை. உங்கள் பிதா உங்களை சிருஷ்டித்தது. ஆவிக்குரிய ஜீவனை பரிமாற்றம் செய்யவும், ஆவிக்குரிய ஜீவனை உடையவராய் இருப்பதற்குமாமே. உங்கள் இருதயம் பூரிப்படைய ஏற்ற ஒருநபரை தேவன் உங்களுக்கு தந்தருளுவாராக. உங்கள் ஆவிக்குரிய வாழ்வை விழத்தள்ளும் நபர்களுடன் உறவாடா தபடி எப்பொழுதும் உங்களை சுற்றி உங்கள் நிமித்தம் உங்கள் ஆவிக்குரிய

வாழ்வு வளரும்படியாகவும் தேவ ஆசீர்வாதத்தினால் அப்படிப்பட்டவர்கள் மறுபடி மறுபடி நீங்கள் சந்திக்கும்படியாகவும் அவர்களது ஆவிக்குரிய அபிஷேகத்திற்கு உங்கள் ஆவியினால் பிரதிபலிப்பு செலுத்தவும் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தேவ இராஜ்யத்தில் வல்லமையான தேவ ஊழியக்காரர், ஊழியக்காரிகளுடன், ஒரு கணப்பொழுதாயினும் நீங்கள் நேரம் சிலவழிக்க தெய்வீக சந்தர்ப்பம் கிடைக்கும்படி உங்களை ஆசீர்வதிக்கிறேன். அச்சந்தர்ப்பத்தில் ஆவி மகிழ்ச்சி, செழிப்பு, அபிஷேகம் என்பன தேவனது விசுவாசத்தினால் நிறைந்த மனிதர்களின் பிரசன்னத்தில் அனுபவிப்பீராக. தேவனது பிரசன்னத்தில் ஒழுக்கத்துடன் தாழ்மையுள்ள பரிசுத்தமுள்ள எப்பொழுதும் பரிசுத்த கரங்களை உயர்த்தும் மனிதர்களும், ஸ்திரிகளும் உங்களிடம் கடந்து வரும்படி நான் ஆசீர்வதிக்கிறேன்.

தேவனது எதிர்பார்ப்பு நீங்கள், அவரது அதிகாரத்தை அனுபவிப்பவரே ஒரு ஸ்தாபனத்தின் தலைவராகவோ அல்லது நிறுவனத்தின் தலைவராக அதிகாரமுடையவர் என உலகத்தவர் இனங்கண்டாலும் அவைகளை விட்டுவிட்டு தேவனது அதிகாரத்திற்-குட்பட்ட ஆவிக்குரிய நபர்களோடு உள்ள உறவின் நிமித்தம் நீங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அடைய வேண்டும் என உங்களை ஆசீர்வதிக்கிறேன். அவர்கள் யார் என்பதை அவர்கள் அறிவார். அவர்களது அடையாளம் இன்னதென்று அறியார். அப்படி அவர்கள் தேவ அதிகாரத்திற்குட்பட்டவர் என்பதையும் அவர்கள் அறிவார். தேவன் அசைவாடுகிறார். என்பதினால் சத்துருவின் கிரியைகளை மேற்கொண்டு தேவ பிரசன்னத்தை கிட்டிச்சேர

செய்வார். நெளிந்து போனதை சீர்படுத்தி, உடைக்கப்பட்டது சுகம்பெற்றும், தேவனது மகிமை கடந்துவரும்படி ஏற்ற சூழ் நிலைகள் உருவாக்கப்படும் உங்களுக்கு கற்றுக்கொடுத்து தேவனது அதிகாரம் சம்பந்தமாக நல்ல முன்மாதிரியான நபர்களோடு நீங்கள் இருக்கும்படி ஆசீர்வதிக்கிறேன். தேவனது ஊழியத்தை செய்யும் தேவனது ஆசீர்வாதத்தை பெறும் அப்படிப்பட்ட கன மகிமையுள்ள ஊழியர், ஊழியக்காரிகளுடன் தோளுக்குதோளோடு நின்று மகிமைக்குள் பிரவேசிக்கும்படி கிடைக்கும் சந்தர்ப்பத்தையிட்டு உங்கள் ஆவியிலே மகிழ்ந்து தேவனை ஸ்தோத்தரிப்பீர்களாக.

தேவனது வழிகளில் பயணிக்கும் போது ஏற்படும் தடைகள் ஏது என அவர்கள் அறியார். அப்படியே தேவனது சமாதானத்தோடு, ஆவிக்குள் நிரம்பி செயல்படவும், அவர்களுக்காய் சகல வேலைகளிலும் ஆயத்தமாக உள்ளதென அறியார். ஏனெனில் அவர்கள் யார் எனவும், தெரியாது. கிருபை தங்கள் மேல் இருப்பது என்பதையும் அவர்கள் விளங்கிக்கொண்டுள்ளனர். தங்கள் எதிர்கால பிரயாசத்தை குறித்து நல்ல தெளிவு உண்டென்பதால் கிடைக்கும் மகிழ்ச்சியை பெற்றுத்தரும் ஜீவன் வல்லமை என்பவற்றுக்கூடாய் கடந்து செல்லும்படி நான்

உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தேவனிடத்திலிருந்து தொடர்ந்து அவரது தெய்வீக கொடைகளோடு கடந்து செல்லும் நபர்களை தேவன் உங்களிடம் கொண்டுவரும்படி ஆசீர்வதிக்கிறேன்.

உங்கள் பிதாவானவர் உங்கள் நிமித்தம் எதிர்பார்ப்பது அவரது மகிழ்ச்சி உங்களுக்குள் அதிகரிக்கும்படி தேவனது கொடைகளை இனங்கண்ட நபர்களோடு உறவாட வேண்டும் என்பதே தேவனது நோக்கம். அப்படிப்பட்டவர்களோடு மிக நெருங்கிய உறவு ஏற்படுத்தவும் தேவன் அவர்கள் நிமித்தம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதங்கள் நீங்களும் அடைய வேண்டும் என நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தேவனோடு ஜீவிக்கும்போது ஏற்படும் தெய்வீக மகிழ்ச்சியை நீங்கள் கண்டுணர வேண்டும் என விஷேட விதமாய் ஆசீர்வதிக்கிறேன். தேவனோடு இருக்கும் போது உங்கள் உள்ளத்தில் பெற்றுக் கொள்ளும் மகிழ்ச்சி உங்களோடு பிரயாணிக்கும் மற்றவர்களும் அடைய ஆசீர்வதிக்கிறேன்.

தேவனது மகிழ்ச்சியைஇனம் கண்ட மற்றவரோடு நீங்களும் ஏற்படுத்திய உறவு, மற்றும் தேவன் நபர்களை மகிழ்வித்து பலப்படுத்தும்படி உங்களிடம் கொண்டுவரப்படுகின்ற படியால் உங்களை ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் அவர்கள் மகிழ்ச்சியை பெருக்கவும் அவர்கள் உங்கள் மகிழ்ச்சியை பெருக்கவும் நெருக்கமான ஜீவனை அடையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீர்வதிக்கிறேன்.

# ஆசீர்வாதம் 04

## புத்திர பாக்கியம்

நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தெளிவாய் விளங்கிக் கொள்ளும்படி நான் (உங்கள் பெயரைக் குறிப்பிடுக.) உங்கள் ஆவியோடு பேசுகிறேன். தேவனது வார்த்தைக்கு உங்கள் ஆவியிலே செவிசாயுங்கள்.

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்-படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவீகாரத்தின் ஆவியை பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சிகொடுக்கிறார். (ரோமர் 8:14-16)

நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருந்தால் அவருடைய ஆவி உங்களுக்கு வழிகாட்டுவதோடு அவர் ஆவி உங்களுக்கு சாட்சி பகிர்வார். புத்திர தன்மையின் ஆவியோடும் அந்த மனோபாவத்தோடும் செயல்பட நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். பரலோக தேவன் மீது முழு நம்பிக்கையும் வைத்து உங்கள் முழு பிரச்சனைகளையும் தேவ சந்நிதியில் தோற்கடித்து ஜெயம் பெறவும் தீர்வை ஏற்படுத்த தேவன்தாமே தமது கிருபையினால் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அப்பா பிதாவானவர் நித்தம் உங்களோடு இருப்பதினால் புத்திர சுவீகாரத்தின் ஆவி உங்களை அடிமைத்தின் ஆவியினால் உங்களை மீட்டு, உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்களைக் குறித்த தெளிவான எதிர்காலம் தேவனுக்கு உண்டென்பதினால் உங்களின் அன்பைக்குறித்தும் தேவனது நித்திய மகிமையைக் குறித்து, உங்களது காலத்தில் அவரது புத்தகத்தில் அன்பினாலே

எழுதப்பட்டுள்ளது என்பதை முழு நிச்சயத்தோடு உங்களை ஆசீர்வதிக்கிறேன். உங்கள் தேவைகளை குறித்து தேவனுக்கு மிகவும் ஆளமான தெளிவு உண்டென்பதினால் அந்தத் தேவைகளை தேவன்தாமே உங்களுக்கு சந்திக்கும் படியாக அவர் ஆதினத்திலே குறைவற்ற செல்வங்கள் உண்டென்பதினாலும் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

**இருதயத்தின் ஆளத்தில் நித்தம் நீங்கள் தேவனுடைய பிள்ளை என்பதை அறிந்து கொள்ளவும் அவரை அப்பா பிதாவே என்று அழைக்க முடியுமென்பதினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.**

இணைந்த உரிமையாளர்களாக்கப்பட்ட படியினால் அவரது உபத்திரவத்திற்கு பங்குள்ளவர்களானது போல் அவரது மகிமைக்கும்

பங்குள்ளவர்களாகிறோம்.

நான் ஆத்தும நம்பிக்கையில் உங்களை ஆசீர்வதிப்பது பிதாவின் உரிமையாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சகல ஐசுவரியமும் இம்மையில் மறுமையில் கிரியையிலும் ஆவியிலும் சாரீரபிரகாரமாக குறைவின்றி உங்களுக்கு கிடைத்திருப்பதனால்

இயேசுவின் பாடுகளில் நீங்களும் பங்குள்ளவராக வேண்டுமென்று உங்களை ஆசீர்வதிக்கிறேன். எனவே நீங்கள் அவரது மகிமைக்கு பங்குள்ளவர்களாவீர்கள். உங்களுக்குள் மற்றும் உங்களைக் குறித்த மகிமையை குறித்து நீங்கள் தெளிவாய் விளங்கிக்கொள்ளும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

உங்களுக்காக பகிரப்பட்ட தேவனுடைய வார்த்தைக்குள் உங்கள் ஆவிக்குள் செவிசாய்க்கவும் (ஏனெனில் இக்காலகட்டத்தில் துக்கம் நமக்காக வெளிப்படுத்தப்பட்டதினால் கிடைக்கும் மகிமைக்கு ஒப்பீடு செய்ய வீழ்ந்துவிடாதபடி சிந்திக்கவும்.) பரிசுத்த்தை விளங்கிக் கொள்ளும்படி நான் உங்களை ஆசீர்வதிப்பது அவரது கிரியையும்

செய்யும் படியாகவே தேவன் வெளிப்படுத்துகிற மகிமையை அளவற்ற விதமாய் கண்டுணரும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் நாள் தோறும் தேவனது சத்தத்திற்கு செவி சாய்க்கும்போது அவர் கற்றுக்கொடுக்கும் வார்த்தைகளை திருப்தியடையும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும் படிக்கு கர்த்தாரகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார். (ஏசா 50:4)

ஒவ்வொரு காலைதோறும் மகிழ்ச்சியையும் பரிபூரணமும் அவரது போதனைக்கு உங்கள் அவதானத்தை உந்துவிப்பாராக. நாளுக்கு நாள் உங்கள் முன் வைக்கும் அவரது காரியங்களில் சோம்பலாகவோ, எதிர்ப்பாளராகவோ இராதபடி ஆசீர்வதிக்கிறேன். நாள் தோறும் அவரது மகிமைக்கு மிகவும் வாஞ்சையும், தாகமும் உண்டாகும்படியாகவும் அவரது வார்த்தைக்கு செவிசாய்க்கவும், அவரது இராஜ்யத்திற்கு கிட்டிச் சேரவும் அவரது ஞானத்தின் போதகத்தை பெற்றுக்கொள்ளவும் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

ஏற்ற காலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது.
(நீதி 15: 23)

## ஆசீர்வாதம் 05

### தேவ சமூகம்

நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தெளிவாய் செவி சாய்க்கும் படி நான் (உங்கள் பெயரை குறிப்பிடுக) உங்கள் ஆவியோடு பேசுகிறேன். தேவனுடைய வார்த்தைகளுக்கு முழு ஆத்துமாவோடு செவிசாய்க்கவும்.

ஜீவ மார்க்கத்த எனக்குத் தெரியப்படுத்துவீர். உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.
(சங் 16:11)

........பெற்றோரின் பாசத்தின் மிகுதியால் ஒரு மகிழ்ச்சி, நண்பர்களின் உறவால் வித்தியாசமான மகிழ்ச்சி, இப்படியாக பலதரப்பட்ட முறையில் வல்லமை வெளிப்படும் படியாக மற்றவருக்காய் மகிழ்ச்சி உண்டாகும் காரியம் தேவன் உங்களுக்காய் உங்களுக்குள் வைத்துள்ளார். உங்கள் பிதாவானவர் கணக்கிடமுடியாத மகத்தான நன்மையான மகிழ்ச்சிக்குள் கடந்து செல்ல உங்களை உருவாக்கியுள்ளார். உங்கள் வாழ்க்கை பலதரப்பட்ட முறைகளில் மகிழும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

நான் உங்கள் ஆத்துமாவை ஆசீர்வதிப்பது அது ஒரு யுத்தகளம் அல்ல. பரிசுத்த ஸ்தலம். பாதுகாப்பின் இடம். பரிசுத்த ஆவியானவர் உங்களை சந்திக்க வருகிற இடம். அவர் உங்களை சந்திக்க வரும் போது தேவன் உங்களுக்குள் வாசம் பண்ணுகிறார் என முழு நிச்சயத்தோடு அறிந்து கொள்ளலாம்.

உங்கள் ஜீவனுக்குள் தேவன் வாசம் பண்ணுவதால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். தனிப்பட்ட அல்லது பொது ஆராதனைகளில் அவர் உங்களுக்குள் வாசம் பண்ணும் போது ஏற்படும் மகிழ்ச்சிக்காக நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.
"இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும்" (சங் 16:7)

இராக்காலங்களில் ஒரு காவலனைப்போல் பரிசுத்த

**உங்கள் பிதாவானவர் உங்கள் நிமித்தம் ஆயத்தப்படுத்தியுள்ள ஜீவமார்க்கத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்துவதினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். உங்களை சூழஉள்ள உலகத்தில் தேவ சமூகத்தை நீங்கள் அறியவும் நான் மகிழ்வுடன் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.**

ஆவியானவர் உங்கள் ஆத்துமாவிற்கு மகிழ்ச்சியுடன் போதிப்பதினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தேவனது சிருஷ்டிப்பில் முதற்பலன் இராத்திரி. எனவே அது பரிசுத்தமுள்ளது. எனவே இரவை சத்துரு தனதாக்கிக்கொள்ள என்னால் அனுமதிக்க முடியாத அது தேவனது பரிசுத்த காலமதினால் அவர் உங்களை சந்தித்து உங்களுக்கு உதவும்படி மகத்தான ஒரு பிரசன்னம் ஏற்படுவது இரவு வேளையில் என்பதை நீங்கள் அறிவீர்களாக''.

இராத்திரி வேளையில் உங்கள் மேலான சிந்தனையில் குழப்பமான சூழ்நிலையற்ற உள்ளான சிந்தனையில் மற்றும் உங்கள் ஆவி தேவனது ஆவிக்கு வெளிப்படுத்துவதினால் தேவனுக்கு மனரம்மியமாக உங்கள் ஆத்துமாவிற்கு உபகாரம் செய்யும்படி கிடைக்கும் சந்தர்ப்பத்தையிட்டு நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

அவரது விரல் அடையாளம் உங்கள் வாழ்க்கை முழுவதும் உங்களுக்காய் ஆயத்தம்பண்ணிய சகல வரங்களும் உங்களை ஆச்சரியப்படுத்துவதற்காக அவர் ஆயத்தம் பண்ணிய காரியங்கள் மற்றும் உங்கள் வாழ்க்கையில் அடங்கியுள்ள எதிர்பாராத பொக்கிஷங்களைக் குறித்து நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

வெளி 3:18ல் குறிப்பிடப்பட்டுள்ள கண்களுக்கு கலிகத்தினால் மூடவும் நாளுக்கு நாள் தேவனது ஆவிக்குரிய உயர்வான இடங்களில் உள்ள பலதரப்பட்ட வரங்களாலும் அவரது சிருஷ்டிப்பின் பிரதிபலனும் அவரது சமூகத்தையும் கண்டுணரும்-படியாகவும், அவரது சத்தியம் மற்றும் அவரது அன்பின்

தொடுகையை உங்கள் வாழ்க்கை முழுவதும் உண்டாகும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

முழு உலகம் பூராவும் தேவன் கிரியை செய்யும் இடங்களுக்கு போகவும், நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். ஒவ்வொரு சந்ததியிலும்உலகின் பலதரப்பட்ட பகுதிகளில் தேவனுடைய ஆவி கிரியை செய்கிற பிரதானமான இடங்கள் உண்டு.

அந்தந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தேவனது பிரசன்னம் அவரது வல்லமை மற்றும் அவரது சமூகம் கிரியை செய்ய அதற்கான விசேட மூல உபதேசம் உண்டு. பிரயாணம் செல்ல சுதந்திரம், அதற்கான விஷேச திறமை மற்றும் வித்தியாசமான புதிய அனுபவங்கள் பெறவும் தேவனது சமூகத்தில் அவரது ஆளுகை வெளிப்படவும் நான் உங்கள் ஆசீர்வதிக்கிறேன். அதற்குள் மூழ்கி அவ் ஆசீர்வாதத்தின் அனுபவத்திற்குள் கடந்து செல்லவும் ஆசீர்வதிக்கிறேன்.

நீங்கள் தேவனது அதிகாரம் மற்றும் ஆசீர்வாதம் உள்ள அவரது

வலது பாரிசத்தில் அமரும்படியான நித்திய பூரணத்திற்குள் கடந்துசெல்ல நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். எனது வலது புரத்தின் “அன்பின் மகனே என் நேச குமாரனே” என்று உங்களை அழைக்கும் சத்தத்தை நீங்கள் அவருக்கு மகிழ்ச்சியை வருவிக்கின்ற படியினாலும் உங்கள் நிமித்தம் அவருக்குள் இருக்கும் ஆளமான அன்பினாலும் ஜீவனுள்ள தேவனுடைய பிரசன்னமும் அவரது சத்தியமும் மகிழ்ச்சியும் பூரணமாய் விளங்கும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன்
தன் ஆத்துமாவை இரு கண்களுக்கு விளக்கி காக்கிறான்.
நீதி 21:23.

## ஆசீர்வாதம் 06

**நம்பிக்கை**

நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் செவிசாய்க்கும்படி நான் (உங்கள் பெயரைக் குறிப்பிடவும்) உங்கள் ஆத்துமாவிற்கு பேசுகிறேன். தேவனுடைய சத்தியத்திற்கு முழு ஆத்துமாவோடு செவிசாய்க்கவும்.

“உம்மை உறுதியாய் பற்றிக்கொண்ட மனதையுடையவன். உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவரை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள். (ஏசாயா 26:3-4)

பழைய ஏற்பாட்டில் “நம்பிக்கை” என்ற பதம் முக்கியமான-தாக அமைந்துள்ளது. அது உங்கள் எதிர்பார்ப்பினால் உங்கள் விருப்பத்தினால் உண்டானதொன்றல்ல. ஆனாலும் உணர்வின் அடிப்படையில் நம்பிக்கையைக் கொண்டு பரிபூரணமாக சரியான எதிர்பார்ப்பினால் உண்டானதாகும். அது கர்ப்பத்தினுள் இருந்து தாயின் இருதய துடிப்பின் சத்தத்தை கேட்பது போலாகும். அவரது இருதய துடிப்பின் போது படிப்படியாக எமது சரீரத்திற்குள் இரத்தம் பாய்ந்தோடுவதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் உங்கள் தாயின் உள்ளத்தை நம்புவது. அது நிமிடத்திற்கு நிமிடம் நாள்தோறும் செயல்படுவதை உள்ளத்தில் ஏற்பட்ட முழு நம்பிக்கையினாலேயே அப்படியே உங்கள் பிதாவானவர் அவரோடு அப்படிப்பட்ட அனுபவத்துக்கூடாக கடந்து வர வேண்டும் என எதிர்பார்க்கிறார். நீங்கள் உங்கள் இருதயத்தில் சமாதானத்தோடு அவரது நம்பிக்கையை நீங்கள் அனுபவிப்பதே தேவனது வாஞ்சை. சிலவேளைகளில் உங்கள் மனசாட்சியில் உடன்பட முடியாமல் போய்விடலாம். தேவனது நம்பிக்கையை குறித்து சந்தேகம் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. ஆயினும் தேவனுக்குள் சமாதானத்தோடு செயல்பட உங்களை அழைத்தும் இருக்கிறார். மிகவும் பெரிதான மகத்தான காரியங்களை நிறைவேற்ற அவர் மீது அளவற்ற நம்பிக்கை அவசியம்.

**சரியான நேரத்தில் சரியான இடத்தில் நீங்கள் தீர்மானம் எடுக்கவேண்டிய போது தேவன் உங்கள் மீது தமது கரத்தை நீட்டி நீங்கள் செயல்பட வேண்டியதை உங்களுக்கு தெரிவிக்கும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.**

இது தேவனது விருப்பமாயினும், உங்கள் உரிமையானாலும் தேவனோடு கூட பரிபூரண சமாதானத்தை ஏற்படுத்தி கொள்ளும். நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். ஒரு சிலர் உங்களை நேசிக்காவிடினும், நீங்கள் அன்பிற்குரிய நபர் என்பதை அலட்சியம் பண்ணினாலும், உங்கள் தேவனது அன்பு அவர் உங்கள் மீது வைத்துள்ள அன்பை நீங்கள் அனுபவிக்கும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். உங்கள்

பிதாவானவர் உங்கள் மீது வைத்துள்ள அன்பை அறிந்து புரிந்து அதை உள்ளத்தில் உணர்ந்து பூரிக்கும் படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். தேவனது அன்பைக்குறித்து சற்றேனும் சந்தேகம் கொள்ளாமல் நம்பும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

உங்கள் தேவைகளை ஆசீர்வதிக்கும்படி, அவர் உங்கள் நம்பிக்கையாக இருப்பதற்கு நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். உங்கள் தேவைகள் மாற்றமடைந்து பலதரப்பட்டதாயினும் அவை-களை சந்திக்க தேவனால் கூடும். நான் உங்களை ஆசீர்வதிப்பது உங்கள் அனுதின ஆகாரம் நிச்சயமாய் பிதாவனிடத்திலிருந்து கிடைக்கும் என்ற உறுதி ஏற்படும்படியாகவே.

பிதாவானவர் உங்களோடு ஐக்கியபடும்போது உங்களுக்குள் பூரண சமாதானம் உண்டாகும்படி உங்களை ஆசீர்வதிக்கிறேன். தெளிவாகவும் தனிப்பட்ட முறையிலும் ஒருசில சந்தர்ப்பங்களில் தேவவார்த்தையோடு உங்களோடு பேசும் போது ஒரு சில வேளைகளில் வார்த்தை இல்லாமல் அமைதியாக எல்லாம் நிறுத்தப்பட்டாயிற்று, என்ற நிலை ஏற்படும் போதும் தேவன் முன்னமே உங்களோடு பேசிய வார்த்தைகளை நினைவு கூர்ந்து அதனூடாக திருப்தி அடையும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் தற்போது அதைரியப்படும்படி இடங்கொடாமல் ஏற்கனவே தேவன் தற்போது தைரியம் கொள்ளும்படி உங்களோடு போதுமான அளவு பேசியுள்ளார்

எல்லா சந்தர்ப்பங்களிலும் தேனது சரியான நேரத்தில் அவருடன் பூரண சமாதானத்தோடு இருக்கும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். தேவனது ஆச்சரியமான செயற்திட்டங்களில் நாளுக்கு நாள் அனுபவிக்கும்படி உங்கள் ஆத்துமாவின் ஆளத்தில் அதை உணரும்படியாகவும் தேவன் உங்களோடு இருக்கும்-படியாகவும், தேவைகளை சந்திக்கும்படியாகவும், தொடர்புகள் சந்திப்புக்கள் சரியான நேரத்தில் மாற்றும்படி அவர்மீது வைத்துள்ள நம்பிக்கை மிக பெரிதானது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்படி உங்களை ஆசீர்வதிக்கிறேன். தேவனது அதீத நம்பிக்கையை நீங்கள் மறவாதபடி அதை குறித்து வைத்துக்கொள்ள நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். ஆபத்தான நேரத்தில் தேவனது கரம் உங்களோடு இருப்பதை உணராவிடின் உங்களது கடந்தகால அனுபவங்களினால் தேவன் குறித்த நேரத்தில் இடைப்படுவார் என்பதை அறிந்து அதைக்குறித்த நம்பிக்கையோடு இருக்கும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

........ உங்கள் தகப்பன் உங்களை பாதுகாப்பதை நீங்கள் உணரும்படியாகவும் உங்களின் பாதுகாப்பை குறித்து நீங்கள் நம்பும்படியாகவும் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். வாதை உங்கள் பக்கத்திற்கு வந்தபோதிலும் அது உங்களை அனுகாதபடியாவும் உங்களை பாதுகாக்கும்படி பிதாவின் அளப்பரிய அன்பு அவரது கிரியை நீங்கள் நன்கு அறியும்படியாகவும் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் நன்கு கண்களை திறந்து காணாவிட்டாலும், உங்கள் பிதாவின் விஷேசித்த ஞானத்தினால் அவரது வல்லமையினால் அந்த கண்ணிகளை நீங்கள் காண முன்பதாகவே அவைகளை நீக்கி

போடுகிறபடியினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் மற்றும் முழு ஜீவியத்தையும் பிதாவானவர் பாதுகாக்கும்படி நிச்சயம் அதை செய்யும்படி தாயின் இருதயத்துடிப்பினுள் வைத்த அந்த பாதுகாப்பின் நம்பிக்கையை குறித்து நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீர்வதிக்கிறேன்.

அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர். அவரை உம்முடைய சமூகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர். (சங்கீதம் 21:6).

# ஆசீர்வாதம் 07

## கர்த்தருக்குள் மகிழ்ச்சி

நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தெளிவாய் செவி சாய்க்கும்படி நான் (உங்கள் பெயரை குறிப்பிடுக) உங்கள் ஆத்துமாவோடு பேசுகிறேன். தேவனது வார்த்தைகளுக்கு உங்கள் முழு இருதயத்தோடு செவிசாய்க்கவும்.

நீங்கள் போய்க்கொழுமையானதைப் புசித்து ஒன்றுமில்லாதவர்களுக்குப் பங்குகளை அனுப்பங்கள். இந்த நாள் நம்முடைய ஆண்டவருக்கு பரிசுத்தமான நாள். விசாரப்பட வேண்டாம். (நெகேமி 8:10)

எருசலேமின் மதில் வீழ்ந்து மறுபடி கட்டியெழுப்பப்படும்போது தேவனுக்கு ஏற்பட்ட மட்டற்ற மகிழ்ச்சியை மக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதே நெகேமியாவின் நோக்கம். இதுவரை தாங்கள் செய்கிற காரியத்திற்காய் தேவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியினால் அடுத்த மைல் கல்லை தாண்ட பெலன் உண்டு. இடிந்து போன நகரில் இன்னும் அதிகமான வேலைகள் மிகுதியாய் உண்டு. சமூகத்தில் காயப்பட்டவர் இன்னும் உண்டு. அவர்கள் தங்கள் துக்கததிலும் தேவனுடைய வார்த்தைகளை கேட்க ஆயத்தப்படுத்த வேண்டும்.

........... கர்த்தரின் மகிழ்ச்சி உங்கள் பெலன் என்பதை நீங்கள் அறிந்தபடியினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். தேவனது ஜீவனை பெற்றுக் கொடுக்கும் ஆழமான விதி முறைகளை நீங்கள் அறியும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

அவரது இருதயத்தை உங்களுக்கு காண்பித்த உங்கள் ஞாபகத்தில் இருக்கின்ற படியினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். தேவன் தமது முழு இருதயத்தோடும், மிகவும் ஆளமாகவும் உங்களை திருப்திகடுத்துவதினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். உங்களின் அறிமுகம் நேர்மையாகவும், பிறப்புரிமை சத்தியமானது என ஏற்றுக்கொள்ளவும் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

தேவனுக்கு முன்பாக நீங்கள் யார்? என அறிந்தபடியினால் அவரது மகிழ்ச்சி உங்களுக்குள் கிரியை செய்கிறபடியினால் அதை ஆழமாய் மகிழ்வுடன் பருகும்படி உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

உங்கள் பிதாவாகிய தேவன் ஒரு வாலிப ஸ்திரியிடத்திற்கு தேவதூதரை அனுப்பி, அவள் தேவனிடத்தில் கிருபை பெற்றவள் என்று இயேசு கிறிஸ்து என்னும் மேசியாவை பிறப்பிக்கும்படி உன்னத வல்லமை பெற்றுக்கொள்ளும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். அதன்பின் அவரது கண் முன்பதாகவே அவள் மீது உள்ள

கிருபையினால் அவள் நிமித்தம் எவ்வளவு சந்தோஷமடைகிறார் என்பதை அவள் அறியாதிருந்தாள். தேவன் அவளுக்குள் ஏற்படுத்திய மகிழ்ச்சி அவள் எதிர்காலத்தில் முகம் கொடுத்த கடினமான நாட்களை கடந்து செல்ல போதுமான பெலன் உண்டாயிற்று. கடினமான உபத்திரமான நாட்களில் கடந்து செல்ல தேவன் அப்படிப்பட்டதான மகிழ்ச்சியை உங்களுக்கு தரும்படி ஆசீர்வதிக்கிறேன்.

கிதியோனின் வாழ்வின் சத்தியத்தை அறியும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். தேவன் தன்மீது வைத்துள்ள அன்பு குறித்து அறியாதவனாய் அவனது பலவீனத்தினால் அவன் தானே ஒளிந்துகொண்டான். அவன் நினைத்திருக்கலாம் தான் உயிரோடு இருப்பதை தேவன் அறிந்திருக்கமாட்டார் என. ஆனாலும் உலக சிருஷ்டிப்பக்கு முன்னதாகவே தேவன் அபரிவிதமாய் விஷேட தளபதியாய், மீதியரின் கைக்கு இஸ்ரவேலரை மீட்கும்படி இவனை தெரிந்துகொண்டதை அவனே அறியாதிருந்தான்.

தேவனது கிருபை உங்கள் மீது உண்டென்பதை அறிந்து அதை உங்கள் ஆவிக்குள் காத்துக்கொண்டு ஜீவிக்கும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். தேவன் ஒரு போதும் உங்களை தோல்விக்கு உட்படுத்தாதபடி அவரது நோக்கம் எப்போதும் உங்களோடு தொடர்பு கொண்டுள்ளது.

உங்கள் ஆவி உற்சாகமடைந்து தேவனது மகிழ்ச்சியை அனுபவிக்கும் போது பரிசுத்தாவிக்கு ஏற்றவிதமாய் செயல்பட நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் நேற்றைய நாளைவிட இன்று வித்தியாசமானவர் என தேவன் அறிந்து மகிழ்ச்சியடையும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். தேவன் எதிர்காலத்தை பார்க்கும் போது உங்களுக்காய் ஆயத்தம்பண்ணின ஆசீர்வாதங்கள் மற்றும் உங்களை ஆச்சரியத்திற்குட்படுத்தும் காரியங்கள் மற்றும் தெய்வீக அமைதியும் எதிர்பாராத பொக்கிஷத்தை குறித்தும் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

நீங்கள் பயணிக்க வேண்டிய வழிகளை ஆயத்தம் செய்யவும் தீர்மானிக்கும்போதும் அவருக்குள் உங்களை குறித்து ஏற்படுகிற மகிழ்ச்சியினால் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

உங்கள் பிதாவானவரால் உருவாக்கப்பட்டுள்ள உங்களால் நிறைவேற்ற வேண்டிய உங்கள் வரங்கள் பற்றிய பெரிதான திருப்தி உண்டாகும்படி நான் உங்கள் ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் உங்களது ஜென்ம உரிமைகளை அனுபவிக்க ஆரம்பிக்கும் போது உங்களுக்காக உங்கள் நிமித்தம் தேவனால் உங்களைக் கொண்டு தேவனது நோக்கம் நிறைவேறும் உங்களோடு ஒன்றிணைந்து செயல்பட அவராலே நீங்கள் தொடப்பை ஏற்படுத்தும் அந்த நபர்களுக்காக தேவன் மகிழும்போது நீங்களும் அந்த மகிழ்ச்சிக்கு பங்குதாரராகும்படி நான் உங்களை

ஆசீர்வதிக்கிறேன்.

நீங்கள் பரிசுத்த ஆவிக்கு செவிசாய்ப்பதினால் சரியான இடம் ஏது. உங்களால் நிறைவேற்றப்படவேண்டியது எது? அது எப்படி நிறைவேற்றப்பட வேண்டும்? என்பன உங்கள் ஆவிக்கு தெளிவாய் உணரும்படியினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

.... தேவனுக்குள் நிலைத்திருக்கும் அன்பு அவரால் உண்டாகும் விசித்திரமான வல்லமை என் நெருக்கங்களோடு முன்னேறவும் சோதனை வேளைகளை தாங்கி நிற்கவும் பூரணப்படுத்தவும், முற்று முழுவதும் ஆயத்தப்பட பின்நிற்காதபடி அறிந்து கொள்ளும்படியாகவும் ஆசீர்வதிக்கிறேன்.

தேவன் உங்கள் நிமித்தம் பெற்றுக்கொள்கிற அளவற்ற திருப்தியினால் விரோதங்கள் ஏழும்பாதபடி எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாதபடி மறுபடியும் பிதாவின் மகிழ்ச்சியின் மையப்பகுதிக்கு திரும்பிவரும்படியான தெளிவு உண்டாகும்படி உங்களை ஆசீர்வதிக்கிறேன். வேதனை, துன்பம், அவமானம், வெட்கம், அதைரியப்படல் போன்ற சகலவிதமான உணர்வுகளுக்கு அடிமைப்பட்டுவிடாது. சரியான வழியில் கடந்து செல்லும்படி தேவன் உங்களுக்காய் உள்ளத்தில் ஆயத்தம் பண்ணின அதிமேன்மையான மகிழ்ச்சியை அனுபவிக்கும்படி நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

உங்கள் பிதா உங்களை உருவாக்கினார். நீங்கள் அவரது படைப்பின் பிரதிபலிப்பே. வரலாற்றில் இக்கால கட்டத்திற்கு ஏற்றவிதமாய் சிருஷ்டிக்கப்பட்ட பொக்கிஷமே. எந்த காலத்தில் நீங்கள் பிறக்க வேண்டும்? எந்த குடும்பத்தோடு உங்களை இணைக்க வேண்டும? மற்றும் இதுவரை நீங்கள் கடந்துவந்த காலங்களை தேவன் தெரிந்து கொண்டபடியினால் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

அவரது உன்னத படைப்பாகிய நீங்கள் மற்றும் உங்களுக்காய் ஆயத்தமாக்கப்பட்ட திட்டங்கள் அவரது சிங்காசனம் என்பன நித்தியமானவை. தேவனது நிலையான வல்லமையினால் பகிர்ந்தளிக்கப்பட்டதை நிறைவேற்றும்படியாகவும் உங்களுக்கு அன்பின் சிருஷ்டிப்பிலே நீங்கள் ஒரு விஷேசித்தவர் என்பதினால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

## ஆசீர்வாதம் - 08

### குணாதிசியம்

நசரேனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் தெளிவாய் செவிசாய்க்கும்படி நான் (உங்கள் பெயரை குறிப்பிடவும்) உங்கள் ஆவியோடு பேசுகிறேன். தேவனுடைய வார்த்தைக்கு முழு ஆத்துமாவோடும் செவிசாய்க்கவும்.

“தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. தம்முடைய மகிமையினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது. நமக்கு தந்தருளினதுமன்றி இச்சையினால் உலகத்தில் உண்டான கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு மாகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. இப்படியிருக்க நீங்கள் அதிக ஜாக்கிரதை உள்ளவராய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே வீணரும், கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது” (2பேதுரு 1:2-8)

......... உங்கள பிதாவானவர் உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தை உருவாக்கி அதை நியதித்து அவைகளை நேர்த்தியாய் கட்டுப்படுத்தி நசரேனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினால் நான் உங்கள் ஆத்துமாவை மேலான இடத்திற்கு கடந்து

செல்லும்படி கட்டளையிடுகிறேன். நான் உங்கள் உறக்கத்திலிருக்கும் ஆத்துமாவை உயிரடையப்பண்ணி அது பாதுகாப்பானதும், சரியான காலத்திலும் உங்கள் ஆத்துமா வெளிப்புறமாக மற்றும் மேல்நோக்கி பிதாவின் நோக்கத்தைப் பார்க்க தகுதியானது எனவும் கட்டளையிடுகிறேன்.

பரிசுத்த ஆவியானவர் உங்கள் பிள்ளைகளை பொறுப்பெடுத்து ஸ்திரப்படுத்தி, உறுதிப்படுத்தி, அவர்கள் உங்கள் அன்புக்குரிய பிள்ளைகளாய் சத்தியத்தை அவர்கள் ஆத்துமாவில் உணரும்படியாகவும் பேசுவீராக.

ஏனெனில் உங்கள் கண்முன் அவர்களுக்கு ஒரு குறையுமில்லை. எச்சந்தர்ப்பத்திலும் உங்கள் அன்பு அவர்களை வேறு பிரிக்க முடியாது.

ஏனெனில் நீங்களே அவர்களை உருவாக்கியது. உங்களது அபிப்பிராயமே அவர்கள். அவர்களது குறைபாடுகளுக்காக நீங்கள் தயங்க வேண்டியதில்லை. அக்குறைகளை நிவிர்த்தி செய்யும் பொருட்டு உடைந்த பகுதிகளை சீர்படுத்துவதற்கும் பரிசுத்த ஆவியானவரே அவர்களுக்கு உதவிபுரியும் படியாகவும், விளங்கிக்கொள்ளும்படியாகவும் பேசுவாராக. அவர்களுக்குத் தேவையான சமாதானம் கிருபை என்பன உங்களுக்கு போதுமானளவு இருப்பதாக என நீங்கள் அறிவீர்கள். இயேசுக் கறிஸ்துவை பின்பற்றும் நீங்கள் உங்கள் தெய்வீக வல்லமையினால் அவர்களது குறைகளை பூரணப்படுத்த மற்றும் பக்தி வேதத்திற்கு ஏதுவாக நீங்கள் ஜீவிக்கும்படி தேவகிருபை பெற்றுக்கொள்வீராக.

......... பெற்றோரது பொருத்தனைகளை உங்கள் முழு ஆவியோடு செவிசாய்க்கவும், அவரது மகிமையின் வல்லமையினால் மிகப் பெறுமதியான பொருத்தனைகளின் ஊடாக உலக வழக்கங்களுக்கு மீண்டு தெய்வீக சுபாவத்திற்கு பங்காளிகளாக முடியும். உங்கள் ஆவியிலே இந்தக் பொருத்தனைகளின் கிருபை பெறுமிடத்து தெய்வீக சுபாவம், சகோதர சிநேகம் மற்றும் அன்பு போன்ற உயர்ந்த குணாதிசயங்கள் வளர்சியடைவதோடு நீங்கள்

இயேசுக்கிறிஸ்துவை அறியும் போது சாபக்கட்டுக்களுக்கு அடிமையாவதில்லை.

சாபங்களிலிருந்து மீளவும், திவ்விய சுபாவத்திற்கு பங்குதாரராகவும் முடியும். உங்கள் ஆவியிலே இந்த அனுக்கிரகத்தை பெற்றவுடன் தன்னம்பிக்கை, விசுவாசம், அறிவு, சுயகட்டுப்பாடு, பின்மாற்றம் அடையாத சுபாவம், தெய்வீக தன்மை, சகோதர சிநேகம், மற்றும் அன்பு போன்ற உயர்ந்த குணாதிசயங்கள் அபிவிருத்தி அடையும் போது இயேசுக்கிறிஸ்துவின் அறிகிற அறிவினாலே சாபக்கட்டுக்களுக்கு அடிமையாவதில்லை.

நான் உங்கள் ஆத்துமாவோடு தொடர்ந்து பேசுகிறேன். ..... தேவ நியமங்களுக்கு கீழ்ப்படியுங்கள். சுகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். மீளவும் கட்டப்படுங்கள். பரிபூரணமடையவும், உங்களை ஆக்கிரமிக்கும் பயத்தினால் விடுதலை அடையவும், எதிர்காலத்தை குறித்த பயம், தோல்வியினால் ஏற்படும் பயம், மற்றும் மனுஷனுக்கு உள்ள பயம், போன்ற பலதரப்பட்ட பயன்களினால் விடுதலை அடையவும் உங்கள் இரட்சகராகிய இயேசுக் கறிஸ்துவின் சத்தத்திற்கு செவிசாய்க்கவும், அவர் உங்களை விட்டுச் செல்லாத படியினாலும், நிங்கள் அவரை விட்டுச் செல்ல இடங்கொடாமலும், உங்கள் பயத்தை இல்லாமல் ஆக்க அவரது அன்பு போதுமானதாக. உங்கள் ஆத்துமா அறியும்படி நான் உங்களோடு பேசுகிறேன்.

பிதாவே உமது பிள்ளைக்கு வரும் போலியான கிரியைகள் இல்லாமல் போவதாக. போலியான நடிப்பு, மத ஆவி, அவருக்கு விரோதமாய் பேசும் குற்றச்சாட்டுக்களில் உமது பிள்ளை ஆவியில்

களிகூர்ந்து செழிப்பு, உற்சாகம், மற்றும் சமாதானம், போன்றவற்றை இல்லாமலாக்க முயற்சிக்கும் வல்லமையிலிருந்து விடுவிப்பீராக.

.......... நீங்கள் தேவனது வீட்டில் பாதுகாப்பாய் இருப்பதை அறிந்தபடியினாலே ஒரு போதும் இல்லாதவாறு உங்கள் ஆவி, தேவனது ஆவியின் சத்தத்திற்கு செவிசாய்ப்பதாக. தேவன் கொடுத்த

பொருத்தனைகளை உங்களது பிறப்புரிமை, உங்களது வளர்ச்சி, உங்கள் ஜீவிய அபிவிருத்தி, என்பவற்றிற்கு தேவனது செயற்பாட்டின் நிமித்தம் மகிழந்து களிகூரவும்.

....... நான் உங்கள் சரீரத்திற்கு உங்கள் ஆவியோடு இணைந்து செயல்படும்படி கட்டளையிடுகிறேன். அதை உங்கள் ஆவியோடு ஒத்துப்போகப் பண்ணுங்கள். சரீர உணர்வுகள், மூளையின் செயற்பாடுகள் என்பன "மிகவும் நன்று" என்று உரைக்கும் தேவனுக்கு செவிசாய்க்கவும். இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் ஆச்சரியமான, விசித்திரமான முறையில் சிருஷ்டிக்கப்பட்ட உங்கள் சரீரமானது சரியான முறையில் செயல்பட சுகத்தோடு, செழிப்போடு, வல்லமையோடு இருப்பதாக. ஏனெனில் ஜீவிக்கும் காலம், இடம் என்பன தேவன் முன்குறித்த பிரகாரமே உண்டு. உங்கள் வாழ்க்கை சந்தோஷத்துடனும், சமாதானத்துடனும் வாழ முடியாமல் சத்துரு வஞ்சித்துள்ளான். தெய்வீக சுபாவத்தோடு பூரண ஐக்கியத்தோடு மேன்மையும், ஆசீர்வாதமும் அவரால் அனுமதிக்கப்பட்ட வாக்குத் தத்தங்களும் உங்களுக்குள் தங்கியுள்ள பரிசுத்த ஆவியானவருக்குள் சிலுவையில் ஜெயம் பெற்ற இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினால் ஆசீர்வதிக்கிறேன்.